# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 393/1995 | **CNR No.** | : | TNKI13-000001-1995 |
| **Name** | : | வேடியம்மாள் | **கணவர் பெயர்** | : | முருகன் |
| **Witness for** | : | Defendant | **Calling** | : | DW4 |
| **Age** | : | 66 | **Village** | : | திப்பம்பட்டி |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 12:00 PM | **End Time** | : | 12:15 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 29.10.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

(1) இந்த வழக்கை எதற்க்காக யார் தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் சிவன் என்பவர் நிலத்திற்காக தாக்கல் செய்துள்ளார். சிவன் என்பவர் அவரது தாத்தா எக்கூரான் என்ற வேடிகவுண்டரிடம் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது தந்தை தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும். எவ்வாறு எனக்கு எதிர்வழக்குரை சங்கதிகள் தெரியும் என்றால் நான் அவருடன் நீதிமன்றத்திற்கு வந்து செல்வேன் அவ்வாறு தான் தெரியும்.

(2) எனது அப்பாவிற்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் ஓரளவு எழுதப்படிக்க தெரியும். என்ன விவரங்கள் சொல்லி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் வழக்கு சொத்துக்கள் எனது பாட்டி உடைய சொத்துக்கள் என்றும் அது எங்களுக்கு தான் சொந்தம் என்றும்

வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொல்லியுள்ளார். நான் சொல்வது தவறு என்றும் அவ்வாறு அவர் எந்த சங்கதிகளும் சொல்லி எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(3) வழக்கு சொத்துக்கள் கூட்டு குடும்பத்தின் வருவாயில் இருந்து 4ம் பிரதிவாதி எக்கூரான் என்ற வேடிகவுண்டர் மூத்தவர் என்ற முறையில் அவர் பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல, அது எனது அம்மா உடைய சொத்தாகும். எனது தந்தை அவரது எதிர்வழக்குரையில் வழக்கு சொத்துக்கள் அவருடைய தனிப்பட்ட சொத்து என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல, அது எனது அம்மாவுடைய சொத்தாகும். வழக்கு சொத்துக்கள் அவருடைய சொத்துக்கள் இல்லை என்றும் மூதாதயர் சொத்து என்ற முறையில் வாதிக்கும் பங்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

(4) எனது கூடுதல் பிரமாணபத்திரத்தில் 5ம் பிரதிவாதிக்கு 1966 கிரைய பத்திர படி பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லும் நிலையில் என்ன என்ன சர்வே எண் சொத்துகள் என்றால் சர்வே எண் தெரியாது. 5ம் பிரதிவாதி 1966 ம் ஆண்டு யாரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் வரதன் என்பவரிடம் இருந்து வாங்கினார். நான் சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. 1966 ல் கிரையம் பெறும் போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். எனக்கு தற்போது என்ன வயது என்றால் 66 இருக்கும். 1966 ஆண்டு எனக்கு என்ன வயது என்றால் சுமார் 12–16 இருக்கும், சரியாக ஞாபகம் இல்லை. கிரையம் பேசிய விவரங்கள் தெரியுமா என்றால் கூட சென்றேன். 1966 ம் ஆண்டு கிரைய

பத்திரம் விவரங்கள் தெரியாது என்றும் உடன் சென்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

(5) **குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai